முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர்கள் கழகம்

## AA1 பரீட்சை - 2018 சனவரி

## (AA11) நிதிக் கணக்கீட்டு அடிப்படைகள்

(Financial Accounting Basics)

2018-01-27
முற்பகல்
[8.45 – 12.00]

பக்கங்கள் : 10
வினாக்கள் : 06

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (கவனமாக வாசிக்கவும்):**

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *விடைகள் உமக்கு வழங்கப்படும் விடைப்புத்தகத்தில் நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த அதே* ***மொழியில்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் எடுத்திருந்தால், அவற்றைத் தெளிவாகக் கூறுக.*

(5) *திட்டமிடப்பட முடியாத கணிப்பான்கள் மாத்திரம் அனுமதிக்கப்படும்.*

(6) ***செயல் வினைச் சொற்களின் நிரல்*** *அவற்றின் வரைவிலக்கணங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் (OTQ's) தவிர்ந்த ஒவ்வொரு வினாவும் ஒரு செயல்* ***வினைச் சொல்லைக்*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொற்களின் நிரலில் தரப்பட்டுள்ள* ***வரைவிலக்கணத்தின்*** *அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## <u>பிரிவு A</u>

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

இந்தப் பிரிவிலுள்ள பதினாறு (16) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 01

***1.1*** *முதல்* ***1.8*** *வரையான வினாக்களுக்கு மிகவும் சரியான விடையினைத் தெரிவு செய்க. உமது விடைப் புத்தகத்தில் வினா இலக்கங்களை வினா ஒழுங்கில் (ஒன்றன்கீழ் ஒன்றாக) எழுதி அவற்றிற்கு எதிரே தெரிவுசெய்த விடையின் இலக்கத்தை எழுதுக.*

**1.1** நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதன் பிரதான நோக்கமாக அமைவது:

(1) பொருளொன்றிற்கான விற்பனை விலையைத் தீர்மானிப்பதற்கு

(2) ஒரு நிறுவனத்தின் பயன்பாட்டாளர்கள் பொருளாதாரத் தீர்மானம் மேற்கொள்வதற்குத் தேவையான நிதித் தகவல்களை வழங்குவதற்கு

(3) மோசடி மற்றும் வழுக்களைத் தடுப்பதற்கு

(4) நிறுவனத்தின் ஊழியர்களைப் பாதுகாப்பதற்கு (02 புள்ளிகள்)

**1.2** ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஏற்பட்ட செலவினங்கள், உண்மையான கொடுப்பனவு செய்யப்படும் போதல்லாது அவை ஏற்பட்ட கணக்கீட்டுக் காலத்தினுள் ஏற்பிசைவு செய்யப்பட வேண்டும். இதனுடன் தொடர்புபட்ட கணக்கீட்டுக் கோட்பாடு கீழ்வருவனவற்றுள் எது?

(1) அட்டுறு கோட்பாடு    (2) கொள்கை மாறாக் கோட்பாடு

(3) உரிமக் கோட்பாடு    (4) வரலாற்றுக் கிரயக் கோட்பாடு

(02 புள்ளிகள்)

**1.3** கொள்வனவாளரால் பொருள் அல்லது சேவைகளின் வகைகள், அளவுகள் மற்றும் இணங்கிய விலைகளைக் குறிப்பிட்டு விற்பனையாளருக்கு வழங்கப்படும் மூல ஆவணமாக அமைவது:

(1) கொள்வனவுக் கட்டளை (PO). (2) பொருள் பெறுகைக் குறிப்பு (GRN).

(3) பொருள் கோரல் குறிப்பு (MRN). (4) கொள்வனவுப் பட்டியல் (PI). (02 புள்ளிகள்)

**1.4** கீழே தரப்பட்டுள்ள ஊடுசெயல்களில் பரிப்பில் குறைப்பை விளைவிக்கும் ஊடுசெயல் எது?

(1) கடன் அடிப்படையில் **ABC டெக்ரைல்ஸிடம்** ரூ.150,000/- க்கு மூலப்பொருள் கொள்வனவு

(2) மூன்று மாதக் கடன் அடிப்படையில் **MKK பெஷனுக்கு** ரூ.850,000/- பெறுமதியான ஆடைகளை விற்பனை செய்தல்

(3) **UE வங்கிக்கு** ரூ.755,000/- பெறுமதியான குறுங்காலக் கடனைத் தீர்ப்பனவு செய்தல்

(4) அடுத்த வருட கட்டட வாடகை முற்பணமாக ரூ.500,000/- ஐக் கொடுப்பனவு செய்தல்

(02 புள்ளிகள்)

**1.5** கீழ்வரும் தகவல்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான **சமன் டிரேடர்ஸின்** ஏடுகளிலிருந்து பிரித்தறியப்பட்டன:

| விபரம் | ரூ. |
|---|---|
| மூலதனம் - 2016 ஏப்ரல் 01 ஆந் திகதி | 550,000 |
| 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டின் இலாபம் | 155,000 |
| ஆண்டின்போது எடுப்பனவுகள் | 350,000 |
| ஆண்டின்போது உள்ளிட்ட மேலதிக மூலதனம் | 200,000 |
| பரிப்புக்கள் - 2017 மார்ச் 31 ஆந் திகதி | 300,000 |

மேற்படி தகவல்களின் அடிப்படையில் **சமன் டிரேடர்ஸின்** 2017 மார்ச் 31 ஆந் திகதி மொத்தச் சொத்துக்களின் பெறுமதி:

(1) ரூ.1,155,000/-. (2) ரூ.705,000/-. (3) ரூ.1,555,000/-. (4) ரூ.855,000/-.

(02 புள்ளிகள்)

**1.6** கீழ்வரும் செலவினங்களானவை **ABC கம்பனி Ltd.** இன் 2017 யூன் மாதத்திற்குரியவை:

| விபரம் | ரூ. |
|---|---|
| ஒரு அலுவலகக் கட்டட நிர்மாணம் | 765,000 |
| உற்பத்திக்கான புதிய இயந்திரக் கொள்வனவு | 1,000,000 |
| தொழிற்சாலை ஊழியர்களுக்கான சம்பளக் கொடுப்பனவு | 550,000 |
| புதிய இயந்திர நிருமாணித்தற் (Installation) கிரயம் | 50,000 |

மேற்படி தகவல்களின் அடிப்படையில் **ABC கம்பனி Ltd.** இன் 2017 யூன் மாதத்திற்குரிய மொத்த வருமானச் செலவினம் (revenue expenditure):

(1) ரூ.600,000/-. (2) ரூ.550,000/-. (3) ரூ.1,600,000/-. (4) ரூ.765,000/-.

(02 புள்ளிகள்)

**1.7** கீழ்வருவனவற்றுள் கணக்கீட்டுச் செயன்முறையின் கணக்கீட்டு உள்ளீடொன்றாக (accounting input) அமைவது எது?

(1) காசுப்பாய்ச்சல் கூற்று (2) நிதி நிலைக் கூற்று

(3) ஊடுசெயல்கள் (4) மேற்கூறிய யாவும். (02 புள்ளிகள்)

**1.8** கீழ்வருவனவற்றுள் “ஒரு பொதுக் கணக்கீட்டு மென்பொருள் பொதிக்கான (general accounting software package)” உதாரணமாக அமைவது எது?

(1) காசேடு (Cash book)

(2) விரைவுப் புத்தகம் (Quick Book)

(3) இருப்புக் கட்டுப்பாட்டு முறைமை (Stock control system)

(4) கடன்பட்டோர் தொகுதி (Debtors module) (02 புள்ளிகள்)

***1.9** முதல் **1.15** வரையான வினாக்களுக்கு உரிய விடைகளை, உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கங்களை ஒழுங்குமுறையாக (ஒன்றன்கீழ் ஒன்றாக) எழுதி, அந்த இலக்கங்களுக்கு எதிரே எழுதுக.*

**1.9** தொடர்ந்து இயங்கும் தன்மை (Concept of Going Concern) கோட்பாட்டைச் சுருக்கமாக விபரிக்குக.. (02 புள்ளிகள்)

**1.10** தனியுரிமையாளர் வியாபாரமொன்றின் நிதிநிலையுடன் நேரடியாகத் தொடர்புபட்ட கூறுகள் (elements) இரண்டினை (02) கூறுக. (02 புள்ளிகள்)

**1.11** கணினிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமையின் ஊடுசெயல் கோவை (transaction files) என்பதனால் கருதப்படுவது யாது என்பதைச் சுருக்கமாக விபரிக்குக. (02 புள்ளிகள்)

**1.12** விற்பனைப் பட்டியலில் (sales invoice) உட்படுத்தப்பட வேண்டிய முக்கிய விடயங்கள் மூன்றினை (03) நிரற்படுத்துக. (03 புள்ளிகள்)

**1.13** கீழ்வரும் தகவல்கள் 2017 டிசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான **பியால் ஒப்டிக்கல்ஸ்** இன் ஏடுகளிலிருந்து பிரித்தறியப்பட்டன:

| | **ரூ.** |
|---|---|
| நிகரச் சொத்துக்கள் - 2017 சனவரி 01 ஆந் திகதி | 525,000 |
| நிகரச் சொத்துக்கள் - 2017 டிசெம்பர் 31 ஆந் திகதி | 850,000 |
| ஆண்டின்போது உரிமையாளர் எடுப்பனவு | 150,000 |
| ஆண்டின்போது உட்படுத்தப்பட்ட மேலதிக மூலதனம் | 250,000 |

இலாபச் சமன்பாட்டை (Profit equation) உபயோகித்து, 2017 டிசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான **பியால் ஒப்டிக்கல்ஸ்** இன் நிகர (தேறிய) இலாபத்தைக் கணிக்குக. (03 புள்ளிகள்)

**1.14** கீழ்வரும் தகவல்கள் **XYZ டிரேடர்ஸ்** இன் 2017 டிசெம்பர் மாதத்திற்கான ஏடுகளிலிருந்து பிரித்தறியப் பட்டன:

| | **ரூ.** |
|---|---|
| விற்பனை | 500,000 |
| கொள்வனவு | 350,000 |
| இருப்பு – 2017 டிசெம்பர் 01 ஆந் திகதி | 150,000 |
| மொத்த இலாபம் | 80,000 |

மேற்படி தகவல்களின் அடிப்படையில் 2017 டிசெம்பர் 31 ஆந் திகதியிலான இருப்பின் பெறுமதியினைக் கணிக்குக. (03 புள்ளிகள்)

**1.15** **சில்வா** என்பவர் **கமல் இலக்ரிக்கல்ஸ்** நிறுவனத்தின் தனியுடைமையாளர் ஆவார். **கமல் இலக்ரிக்கல்ஸ்** இன் கீழ்வரும் ஊடுசெயல்கள் ஒவ்வொன்றிற்கும் சரியான இரட்டைப் பதிவுகளை எழுதுக:

**(a)** **சில்வா** ரூ.1,000,000/- பணத்தினையும் ரூ.250,000/- பெறுமதியான அலுவலக உபகரணத்தினையும் தமது ஆரம்ப மூலதனமாக முதலிட்டு வியாபாரத்தைத் தொடங்குதல்.

**(b)** மீள் விற்பனை நோக்கத்தில் ரூ.800,000/- பெறுமதியான இலத்திரனியல் உபகரணங்களை **அஜித்திடமிருந்து** கடன் அடிப்படையில் கொள்வனவு செய்தல்

**(c)** **சில்வா** தனது தனிப்பட்ட தேவைக்காக ரூ.5,600/- காசினை எடுத்துக்கொள்ளல்

(06 புள்ளிகள்)

**1.16** கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்கள் ஒவ்வொன்றும் **சரியானதா** அல்லது **தவறானதா** எனக் கூறுக. விடைப் புத்தகத்தில் உரிய வினாவின் ஆங்கில எழுத்தினை எழுதி, அவற்றிற்கு எதிரே **சரி** அல்லது **தவறு** என எழுதுக.

**(a)** பொதுப் பேரேடானது நிதிக்கூற்றுத் தொகுதியின் ஒரு கூறாகும்.

**(b)** பரீட்சை மீதியொன்றினைத் தயாரிப்பதன் மூலம் சகல கணக்கீட்டு வழுக்களையும் கண்டுபிடிக்க முடியும்.

**(c)** காசேடானது ஒரு முதன்மைப் பதிவேடாகும். (03 புள்ளிகள்)

பிரிவு *A* முடிவு

## <u>பிரிவு B</u>

இந்தப் பிரிவிலுள்ள நான்கு (04) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 02

**சேனக** ரூ. 1,000,000/- இனை முதலீடு செய்து 2016 ஏப்ரல் 01 ஆந் திகதி **சேனக டெயிலர்ஸ்** என்ற தனியுடைமை வியாபாரத்தை ஆரம்பித்தார். 2017 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான காசேட்டின் தொகுப்பு கீழ்வருமாறு:

**2017 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான காசேடு**

| | **ரூ.** | | **ரூ.** |
|---|---|---|---|
| **சேனக**வின் ஆரம்ப முதலீடு | 1,000,000 | கடைக்கான வாடகைக் கொடுப்பனவு | 900,000 |
| கடன்பட்டோரிடமிருந்தான பெறுவனவு | 2,400,000 | கடன்கொடுத்தோருக்கான கொடுப்பனவு | 1,100,000 |
| | | காற்றுச் சீரமைப்பி (air conditioners) கொள்வனவு | 800,000 |
| | | மின்சாரக் கட்டணக் கொடுப்பனவு | 400,000 |
| | | மீதி கொ/செ | 200,000 |
| | **3,400,000** | | **3,400,000** |

கீழ்வரும் மேலதிக தகவல்கள் தரப்பட்டுள்ளன:

(1) 2017 சனவரி 01 ஆந் திகதி காற்றுச் சீரமைப்பி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டதுடன் அது நேர்கோட்டு அடிப்படையில் கிரயத்தில் 20% தேய்மானம் செய்யப்படும்.

(2) 2017 மார்ச் 31 ஆந் திகதியில் வருமதிகள் மற்றும் சென்மதிகள் கீழ்வருமாறு:

| வருமதிகள் / சென்மதிகள் | ரூ. |
|---|---|
| வியாபார கடன்கொடுத்தோர் | 800,000 |
| வியாபாரக் கடன்பட்டோர் | 600,000 |
| முன் செலுத்தப்பட்ட கடை வாடகை | 75,000 |
| அட்டுறு மின்கட்டணம் | 50,000 |

(3) சகல விற்பனை மற்றும் கொள்வனவுகளும் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதுடன் 2017 மார்ச் 31 ஆந் திகதியில் எந்தவித இருப்புகளும் காணப்படவில்லை.

**நீங்கள் செய்யவேண்டியது:**

2017 மார்ச் 31 ஆந் திகதியில் **சேனக டெயிலர்ஸ்** இன் பரீட்சை மீதியைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 03

2017 மார்ச் 31 ஆந் திகதி **H&M டிரேடர்ஸ்** இன் உதவிக் கணக்காளரினால் தயாரிக்கப்பட்ட பரீட்சைமீதி இணங்கவில்லை. ஏற்பட்ட வித்தியாசமான ரூ.700,000/- தொங்கற் கணக்கில் வரவுப் பதிவு செய்யப்பட்டது.

பின்னர் கீழ்வரும் வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன:

(1) ரூ.175,000/- க்கான காசு விற்பனை, விற்பனைக் கணக்கில் ரூ.715,000/- ஆகப் பதிவுசெய்யப் பட்டதுடன் இது காசேட்டில் சரியாகப் பதிவுசெய்யப்பட்டது.

(2) ரூ.100,000/- பெறுமதியான அலுவலக உபகரணக் கொள்வனவு, அலுவலக உபகரணப் பராமரிப்புக் கணக்கில் வரவுப்பதிவு செய்யப்பட்டிருந்தது. இது காசேட்டில் சரியாகப் பதிவுசெய்யப்பட்டது.

(3) வியாபாரக் கடன்கொடுத்தோரிடமிருந்தான ரூ.200,000/- க்கான கொள்வனவானது கடன்கொடுத்தோர் கணக்கில் இரு தடவை பதிவுசெய்யப்பட்டது. ஆனாலும் இது கொள்வனவுக் கணக்கில் சரியாகப் பதிவுசெய்யப்பட்டது.

(4) வட்டி வருமானம் ரூ.15,000/- ஆனது தவறுதலாக வட்டிச் செலவுக் கணக்கில் ரூ.25,000/- ஆக வரவுப்பதிவு செய்யப்பட்டிருந்தது. ஆனாலும் இது காசேட்டில் சரியாகப் பதிவுசெய்யப்பட்டது.

(5) ரூ.324,000/- கடன் விற்பனையானது வியாபார வருமதிகள் கணக்கு (trade receivables) மற்றும் விற்பனைக் கணக்கு இரண்டிலும் ரூ.342,000/- ஆகப் பதிவுசெய்யப்பட்டது.

(6) ரூ.30,000/- வங்கிக் கடன் மூலதன மீள்கொடுப்பனவானது, தவறுதலாக கடனுக்கான வட்டிச் செலவினக் கணக்கில் வரவுப்பதிவு செய்யப்பட்டபோதிலும் காசேட்டில் சரியாகப் பதிவுசெய்யப் பட்டது.

**நீங்கள் கீழ்வருவனவற்றைத் தயாரிக்குமாறு வேண்டப்படுகிறீர்கள்:**

(a) மேற்படி வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவுகள் (07 புள்ளிகள்)

(b) தொங்கற் கணக்கு (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் மரத்தாலான சாப்பாட்டு மேசைகளை (dining table) உற்பத்தி செய்யும் **விஸ்வா அன்ட் சன்ஸ்** கம்பனியின் 2017 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டுடன் தொடர்புடையவை:

| | **ரூ.** |
|---|---:|
| மூலப்பொருள் கொள்வனவு – தேக்கு மரம் | 55,000,000 |
| உள்வந்த வண்டிக் கூலி – தேக்கு மரம் | 2,000,000 |
| ஏனைய நேர் மூலப்பொருள் கொள்வனவு | 24,000,000 |
| நேர் கூலி – உற்பத்தித் தொழிலாளர்கள் | 15,000,000 |
| கட்டட வாடகை | 2,000,000 |
| முகாமையாளர் சம்பளம் | 2,500,000 |
| மரம் வெட்டும் உபகரணத்தின் தேய்மானம் | 400,000 |

கீழ்வரும் மேலதிகத் தகவல்கள் தரப்பட்டுள்ளன:

(1) தொக்குகள் கீழ்வருமாறு மதிப்பிடப்பட்டன.

(ரூ.)

| | **2016 ஏப்ரல் 01 ஆந் திகதியில்** | **2017 மார்ச் 31ஆந் திகதியில்** |
|---|---:|---:|
| மூலப்பொருட்கள்: | | |
| தேக்கு மரம் | 15,500,000 | 18,000,000 |
| ஏனைய நேர் மூலப்பொருள் | 7,500,000 | 8,000,000 |
| புத்துருவாகும் வேலை (முதன்மைக் கிரயத்தில்) | 1,000,000 | 1,500,000 |

(2) கட்டட வாடகையானது கீழ்வரும் விகிதங்களில் ஒதுக்கப்பட வேண்டும்:

தொழிற்சாலை : 70%

அலுவலகம் : 30%

(3) **விஸ்வா அன்ட் சன்ஸ்** இன் முகாமையாளர், தொழிற்சாலையுடன் தொடர்புபட்ட வேலை மற்றும் அலுவலக நிர்வாக வேலை இரண்டிற்கும் பொறுப்பானவர். அவருடைய 80% மான சம்பளமானது தொழிற்சாலை தொடர்புபட்ட வேலையின் நிமித்தம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(4) உற்பத்தி செய்யப்படும் ஒவ்வொரு மரத்தாலான சாப்பாட்டு மேசைக்கும் ரூ.6,000/- ஊக்குவிப்புப் பணம் கொடுப்பனவு செய்யப்படுகிறது. இந்த ஆண்டில் பூரணப்படுத்தப்பட்ட சாப்பாட்டு மேசைகளின் எண்ணிக்கை 250 ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

2017 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான **விஸ்வா அன்ட் சன்ஸ்** இன் உற்பத்திக் கணக்கினைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 05

(a) 2017 நவெம்பர் மாதத்திற்கான கீழே தரப்பட்டுள்ள ஊடுசெயல்கள் **''டிக்கிறி டிரேடர்ஸ்''** தனியுடைமை நிறுவனத்தின் ஏடுகளிலிருந்து பிரித்தறியப்பட்டனவாகும்:

| **திகதி** | **ஊடுசெயல்** |
|---|---|
| 01.11.2017 | மீள்விற்பனைக்காக ரூ.650,000/- பெறுமதியான பொருட்கள் கடன் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டன. |
| 05.11.2017 | **ABC வங்கியிடமிருந்து** ரூ.750,000/- பெறுமதியான குறுங்காலக் கடன் பெறப்பட்டது. |
| 20.11.2017 | **டிக்கிறி டிரேடர்ஸ்** இன் உரிமையாளர் தனது தனிப்பட்ட தேவைக்காக ரூ.30,000/- கிரயமான பொருட்களை எடுத்துக் கொண்டார். |
| 25.11.2017 | 2017 நவெம்பர் மாத தொலைபேசிக் கட்டணம் ரூ.5,000/-. ஆயினும் ரூ.4,000/- மட்டுமே அம்மாதத்தில் செலுத்தப்பட்டது. |
| 28.11.2017 | ரூ.200,000/- கிரயமான பொருட்கள் ரூ.220,000/- க்கு கடன் அடிப்படையில் விற்பனை செய்யப்பட்டன. |
| 30.11.2017 | கடனுக்குக் கொள்வனவு செய்த பொருட்களுக்காக அந்தக் கடன் கொடுத்தோருக்கு ரூ.300,000/- செலுத்தப்பட்டது. |

***நீங்கள் செய்யவேண்டியது:***

கீழே தரப்பட்டுள்ள கணக்கீட்டுச் சமன்பாட்டில் மேற்படி ஊடுசெயல்கள் ஒவ்வொன்றினதும் தாக்கத்தைப் **பதிவுசெய்க**:

*(தொக்கு + கடன்பட்டோர் + காசு = உரிமையாண்மை + பரிப்புகள்)* (06 புள்ளிகள்)

(b) **அசங்க டிரேடர்ஸ்** தனியுடைமை வியாபாரம், கான்கிரீட் கற்களை (concrete blocks) உற்பத்திசெய்து, விற்பனை செய்கிறது. 2017 டிசெம்பர் மாதத்தில் **அசங்க டிரேடர்ஸ்** மேற்கொண்ட கடன் விற்பனைகள் கீழே தரப்பட்டுள்ளன:

| **திகதி** | **பட்டியல் இல.** | **வாடிக்கையாளர் பெயர்** | **உருப்படி விபரம்** | | | **வியாபாரக் கழிவு %** |
|---|---|---|---|---|---|---|
| | | | **விபரம்** | **கணியம் (அலகுகள்)** | **கல் ஒன்றின் விலை (ரூ.)** | |
| 01.12.2017 | 45 | AA ஹாட்வெயார் | சிறிய கற்கள் | 5,000 | 40 | |
| 20.12.2017 | 46 | AA ஹாட்வெயார் | பெரிய கற்கள் | 8,000 | 50 | 5% |
| 22.12.2017 | 47 | நாமல் ஸ்டோர்ஸ் | நடுத்தரக் கற்கள் | 5,000 | 45 | |

***நீங்கள் செய்யவேண்டியது:***

2017 டிசெம்பர் மாதத்திற்கான **அசங்க டிரேடர்ஸ்** இன் விற்பனை நாளேட்டினைத் **தயாரிக்குக.**

(04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

பிரிவு *B* முடிவு

## பிரிவு C

இந்தப் பிரிவிலுள்ள ஒரே (01) வினாவுக்கு விடை தருக.

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 06

**ராகல் மோட்டர்ஸ்** என்பது மோட்டார் சைக்கிள்களை விற்பனை செய்யும் தனியுரிமையாளர் வியாபாரம் ஆகும். 2017 மார்ச் 31 இல் **ராகல் மோட்டர்ஸ்** இன் பரீட்சைமீதி கீழ்வருமாறு:

**ராகல் மோட்டர்ஸ்**

**2017 மார்ச் 31 இல் பரீட்சை மீதி** *(ரூ.'000)*

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் (கிரயத்தில்): | | |
| காணி | 4,000 | |
| கட்டடம் | 2,500 | |
| கணினிகள் | 800 | |
| விநியோக லொறி | 1,250 | |
| திரள் தேய்மானம் - 2016 ஏப்ரல் 01 இல்: | | |
| கட்டடம் | | 500 |
| கணினிகள் | | 250 |
| விநியோக லொறி | | 520 |
| விற்பனை | | 27,000 |
| கொள்வனவு | 18,000 | |
| தொக்குகள் - 2016 ஏப்ரல் 01 இல் | 6,400 | |
| வியாபார வருமதிகள் | 2,000 | |
| வியாபார சென்மதிகள் | | 3,000 |
| ஐயக்கடன் ஏற்பாடு – 2016 ஏப்ரல் 01 இல் | | 150 |
| வங்கி மேலதிகப்பற்று வட்டி | 100 | |
| மின்சாரம் | 450 | |
| காப்புறுதி | 900 | |
| கையிலுள்ள காசு | 250 | |
| வங்கி மேலதிகப்பற்று | | 300 |
| ஊழியர்களுக்கான சம்பளம் | 1,100 | |
| விற்பனைப் பணிசை (தரகு) | 250 | |
| 2016 ஏப்ரல் 01 இல் மூலதனம் | | 6,280 |
| | **38,000** | **38,000** |

கீழ்வரும் மேலதிக தகவல்கள் தரப்பட்டுள்ளன:

(1) 2017 மார்ச் 31 இல் இறுதித் தொக்கின் பெறுமதி ரூ.5,750,000/-.

(2) காப்புறுதிக் கட்டணமான ரூ.900,000/- ஆனது 2016 யூலை 01 ஆந் திகதியிலிருந்து 2017 யூன் 30 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்குச் செலுத்தப்பட்டது.

(3) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் நேர்கோட்டு அடிப்படையில் கிரயத்தின் மீது கீழ்வரும் வீதங்களில் தேய்மானம் செய்யப்படும்:

| | | |
|---|---|---|
| கட்டடம் | : | 5% |
| கணினிகள் | : | 25% |
| விநியோக லொறி | : | 10 % |

(4) **அருண்** என்பவரிடமிருந்து வியாபார வருமதியாகவுள்ள ரூ.50,000/- இனை அறவிடமுடியாக் கடனாக பதிவழிக்க **ராகல் மோட்டர்ஸ்** உரிமையாளர் தீர்மானித்தார். 2017 மார்ச் 31 ஆந் திகதி நிலுவை யிலிருந்த வியாபார வருமதிகள் மீதிக்கான ஐயக் கடன்களுக்கான பொதுவான ஏற்பாடு 10% ஆகச் செய்யப்பட வேண்டும்.

(5) 2017 மார்ச் மாதத்திற்கான மின் கட்டணம் ரூ.50,000/- செலுத்தப்படவில்லை.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக**:

(a) 2017 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்று (11 புள்ளிகள்)

(b) 2017 மார்ச் 31 ஆந் திகதியில் நிதிநிலைக் கூற்று. (09 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

பிரிவு *C* முடிவு

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |